
## புரட்சிகர அறவாழ்வின் அடையாளமாக வாழ்ந்து – மறைந்த

# தோழர் இரா.நல்லகண்ணுவின் வாழ்க்கைக் குறிப்பு!



**சென்னை,பிப்.27-**

**இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநில செயற்குழு அச்சு மற்றும் மின்னணு ஊடகங்களுக்கு விடுத்துள்ள செய்தி அறிக்கை வருமாறு:**

**புரட்சிகர அறவாழ்வின் அடையாளமாக வாழ்ந்த தோழர் இரா. நல்லகண்ணு மறைவெய்தினார்.**

இந்தியக் கம்யூனிஸ்டு கட்சியின் மூத்த தலைவரும், சமூக விடுதலைப் போராட்ட வீரருமான தியாக சீலர் தோழர் இரா.நல்லகண்ணு (101) நேற்று முன்தினம் (25.02.2026) பிற்பகல் 02.15 மணிக்கு, சென்னை ராஜீவ்காந்தி அரசினர் பொது மருத்துவமனையில் மறைவெய்தினார் என்ற துயரச் செய்தியை ஆழ்ந்த வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

ஒருங்கிணைந்த திருநெல்வேலி மாவட்டம், தற்போதைய தூத்துக்குடி மாவட்டம் ஸ்ரீவைகுந்தத்தில் வசதியான விவசாயக் குடும்பத்தில் தோழர் இரா. நல்லகண்ணு 1925 டிசம்பர் 26 ஆம் தேதி பிறந்தார்.

பள்ளிப்பருவ காலத்தில் தீவிரமாக நடைபெற்ற நாட்டின் விடுதலைப் போராட்டத்தால் ஈர்க்கப்பட்டு, சிறுவர்களை அணி திரட்டி, பாரதியின் பாடல்களை தெரு, தெருவாக பாடி, சுதந்திரக் கனலை மூட்டியவர்.

பள்ளி ஆசிரியர் பலவேசம் வழியாக கம்யூனிஸ்டு கொள்கை வழியை தேர்வு செய்து கொண்டவர். நெல்லை சதிவழக்கில் கைது செய்யப்பட்டு சித்திரவதைக்கு ஆளானவர்.

இயக்கத்தின் முன்னோடி தலைவர்களான ப.மாணிக்கம்,

கே.பாலதண்டாயுதம், மீனாட்சி நாதன், வி.எஸ்.காந்தி, கே. செல்லையா, எம்.எஸ்.தேனு போன்றோர்களுடன் இணைந்து செயல்பட்டவர்.

நாங்குனேரி வட்டாரத்தில் மடத்தின் ஆதிக்கத்தை எதிர்த்து, விவசாயிகள் நில உரிமைக்காக போராடி வெற்றி கண்டவர்.

கட்சியின் தலைமையகத்தின் தகவல் மையப் பொறுப்புக்கு அழைத்து வரப்பட்டவர்.

தமிழ் மாநில விவசாயத் தொழிலாளர் சங்கத்தின் பொதுச் செயலாளர் பொறுப்பில் 25 ஆண்டுகள் செயல்பட்டு, அடித்தட்டு உழைக்கும் மக்களின் உரிமைகளுக்காக போராடியவர்.

இந்தியக் கம்யூனிஸ்டு கட்சியின் மாநிலக் குழு உறுப்பினராக தொடங்கி கட்சியின் தமிழ்நாடு மாநிலச் செயலாளர் பொறுப்புக்கு உயர்ந்தவர். கட்சியின் மத்தியக் கட்டுப்பாட்டுக் குழு தலைவர், தேசிய நிர்வாகக் குழு உறுப்பினர் போன்ற உயர் பொறுப்புகளிலும் செயல்பட்ட பெருமைக்குரியவர்.

கடந்த 2025 ஆகஸ்டு 22, காபி குடிக்கும் போது புரையேறியதால், மூச்சு திணறலுக்கு ஆளாகி மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டு, மூன்று மாத காலம் தொடர் சிகிச்சை பெற்று வீடு திரும்பினார். கடந்த சில நாட்களுக்கு முன்பு மீண்டும் மூச்சு திணறல் ஏற்பட்டு இராஜீவ் காந்தி அரசினர் பொது மருத்துவமனையின் தீவிர சிகிச்சை பிரிவில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்த நிலையில் தோழர் இரா.நல்லகண்ணு இயற்கை எய்தினார்.

பொது வாழ்வில் தூய்மை, எளிமை, நேர்மை, தன்னலமறுப்பு இவைகளின் வாழும் அடையாளமாக திகழ்ந்து தமிழக மக்களின் பேரன்பையும், பெருமதிப்பையும் பெற்றவர். வகுப்புவாத, சாதவெறி சக்திகளுக்கு எதிராக சமரசமின்றி போராடி வந்தவர். அனுபவம் ததும்பி நின்ற மூத்த அரசியல் தலைவரை இழந்து நிற்பது பெரும் துயரமாகும்.

**மருத்துவமனையில் இருந்து தோழர் இரா.நல்லகண்ணு அவர்களின் நல்லுடல் நேற்று முன்தினம் (25.02.2026) மாலை 5 மணி முதல், நேற்று 26.02.2026 பிற்பகல் 3 மணி வரை 43 செவாலியே சிவாஜி கணேசன் சாலை, தி. நகர், சென்னை 600 017 என்ற முகவரியில் உள்ள இந்தியக் கம்யூனிஸ்டு கட்சியின் தமிழ்நாடு மாநிலத் தலைமை அலுவலகத்தில் (பாலன் இல்லம்) பொதுமக்கள் பார்வைக்கும், மரியாதைக்கும் வைக்கப்பட்டிருந்தது. பிறகு மாலை 5 மணிக்கு அன்னாரது நல்லுடல் பொதுமக்கள் அணி வகுப்புடன் சென்னை மருத்துவக் கல்லூரி மருத்துவ மனைக்கு, மருத்துவ ஆய்வுக்காக கொடையளிக்கப்பட்டது என்பதை தெரிவித்துக் கொள்கிறது.**

தோழர் இரா.நல்லகண்ணு அவர்களின் மறைவுக்கு ஏழு நாட்கள் துக்கம் கடைபிடிக்கும் வகையில் செங்கொடிகள் அரைக் கம்பத்தில் தாழ்த்தி பறக்கவிடப்படும் என்பதை தெரிவித்துக் கொள்கிறோம்.

கீழே தோழர் இரா.நல்லகண்ணு அவர்களின் வாழ்க்கை குறிப்பு இணைக்கப்பட்டுள்ளது.

### தியாக சீலர் இரா.நல்லகண்ணு & வாழ்க்கை குறிப்பு...

முந்தைய ஒருங்கிணைந்த திருநெல்வேலி மாவட்டம், தற்போதைய தூத்துக்குடி மாவட்டத்தில் உள்ள ஸ்ரீவைகுண்டத்தில் வாழ்ந்து வந்த நல்ல வசதியான விவசாயக் குடும்பத்தில் இராமசாமி கருப்பாயி தம்பதியருக்கு மூன்றாவது குழந்தையாக 1925 டிசம்பர் 26 பிறந்தவர் தோழர் இரா.நல்லகண்ணு.

### இவருடன் பிறந்த சகோதர, சகோதரிகள்

1. இரா.முத்துராமலிங்கம் (அண்ணன்)
2. இரா.சேது அம்மாள் (அக்கா)
3. இரா.நல்லகண்ணு
4. இரா.வைகுண்டத்தம்மாள் (தங்கை)
5. இரா.சேது வைகுண்டராமன் (தம்பி)
6. இரா.முத்தம்மாள் (தங்கை)
7. இரா.இருளப்பன் (தம்பி)
8. இரா.லட்சுமி (தங்கை)
9. கமலம் (தங்கை)
10. ஜானகி (தங்கை) என பெரிய குடும்பத்தில் பிறந்தவர்.

நல்லகண்ணுவின் பெற்றோர்கள் குழந்தைகள் அனைவரையும் படிக்க வைத்து விட வேண்டும் என்பதில் கருத்தாக இருந்துள்ளனர். அதனால் அனைவரும் உயர் கல்வி பெற்றுள்ளனர்.

1942-44 காலகட்டத்தில் தேச விடுதலைப் போராட்ட வீரர் அண்ணாச்சி சண்முகம் அவர்களிடம் காரல் மார்க்ஸ், ஏங்கல்ஸ், லெனின், ஸ்டாலின் நூல்களை வாங்கி படித்து, தத்துவக் கண்ணோட்டம் பெற்றவர். அவரது பள்ளி ஆசிரியர் பலவேசம் அவர்களிடமும் இடதுசாரி கருத்துக்களை பெற்று, களப்பணி ஆர்வத்தை வளர்த்துக் கொண்டவர்.

ஸ்ரீவைகுண்டத்தில் வாலிபர் சங்கம் அமைத்து, அதில் இணைந்து செயல்படத் தொடங்கியதில் இவரது அமைப்பு சார்ந்த பொது வாழ்க்கை தொடங்குகிறது.

கம்யூனிஸ்டு கட்சியின் திருநெல்வேலி மாவட்டச் செயலாளராக பணியாற்றிய வி.எஸ்.காந்தி வாலிபர் சங்க செயலாளராக செயல்பட்ட அமைப்பின் முன்னோடி உறுப்பினராக இருந்த இரா.நல்லகண்ணு "வாலிபர் சங்கம் தான் எனது அரசியல் ஆரம்பப் பள்ளி" என்கிறார். இவருடன் சக தோழராக இணைந்து செயல்பட்ட என்.டி.வானமாமலை பின் நாட்களில் சென்னை உயர் நீதிமன்றத்தில் நாடறிந்த முன்னணி வழக்கறிஞராக திகழ்ந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

நான்குநேரி போர்டு உயர்நிலைப் பள்ளி ஆசிரியர் நா.வானமாமலை, நெல்லை மாவட்ட கட்சிப் பணிக்காக சென்ற தோழர் ப.மாணிக்கம், மீனாட்சி நாதன், கே.பாலதண்டாயுதம் போன்றவர்கள் தோழர் இரா.நல்லகண்ணு அரசியல் வாழ்க்கையின் முன்னோடிகளாக இருந்துள்ளனர்.

நான்குநேரி வட்டாரத்தில் விவசாயிகளை திரட்டி சங்கம் அமைத்து போராடுவதில் முனைப்புடன் செயல்பட்டு வந்த நல்லகண்ணுவை நேரில் கண்ட விடுதலைப் போராட்ட வீரர், பி. சீனிவாசராவ் "கட்டுமஸ்தான உடலமைப்பை கொண்ட, கிராமத்து விவசாயிகளின் சாயலில் உள்ள வாலிபர் நல்லகண்ணு, எதிர் காலத்தில் நல்ல ஊழியராக வருவார்" என 1950களில் தொலை நோக்குப் பார்வையுடன் மதிப்பிட்டுள்ளார்.

விடுதலைப் போராட்ட காலத்தில் தீவிரமாக செயல்பட்ட

இரா.நல்லகண்ணு, திருநெல்வேலி சதி வழக்கில் கைது செய்யப்பட்டு கடுமையான தண்டனைக்குள்ளானர். இவர் ஒன்பதரை வருடங்கள் சிறை வாழ்க்கை அனுபவமும் சில ஆண்டுகள் தலைமறைவு வாழ்க்கை அனுபவமும் பெற்றுள்ளார்.

தமிழ்மொழி மீது தளராத பற்றுக் கொண்டவர். புலவர் பட்டம் பயின்றவர். பாரதியார் பாடல்களை பாடி, தேச பக்தி கனலை மூட்டியவர். தொன்மை இலக்கியங்களை கற்பதில் ஆர்வம் காட்டியவர். தமிழ்நாடு கலை இலக்கிய பெருமன்றத்துடன் எப்போதும் உறவில் இருந்து வந்தவர்.

திருநெல்வேலி மாவட்ட செயற்குழு உறுப்பினர் பொறுப்பில் இருந்த இரா.நல்லகண்ணு, கட்சி தலைமையத்துக்கு அழைத்து வரப்பட்டார். இங்கு கட்சி தகவல் மையப் பொறுப்பாளராக செயல்பட்டார். பின்னர் தமிழ்நாடு விவசாயத் தொழிலாளர் சங்கத்தின் மாநிலச் செயலாளர் பொறுப்புக்கு தேர்வு செய்யப்பட்டு 1992 வரையிலும் அப்பொறுப்பில் மிகச் சிறப்பாக செயல்பட்டு, சங்க அமைப்பை விரிவு படுத்தி, புதிய ஊழியர்களையும் கண்டறிந்து சங்கப் பணிகளில் இணைத்துக் கொண்டவர்.

இந்தியக் கம்யூனிஸ்டு கட்சியின் தமிழ்நாடு மாநிலச் செயலாளர் பொறுப்புக்கு 1992 ஆம் ஆண்டில் தேர்வு செய்யப்பட்டார். 2005 ஆம் ஆண்டு வரை அந்தப் பொறுப்பில் சிறப்பாக செயல்பட்டு, தமிழ்நாட்டின் அரசியல் தலைவர் எனும் உயர்ந்த வடிவம் பெற்றவர்.

1996 ஆம் ஆண்டில் அரசியல் களம் கடுமையான நெருக்கடியை எதிர் கொண்ட போது தி.மு.கழகம், தமிழ் மாநில காங்கிரஸ், இந்தியக் கம்யூனிஸ்டு கட்சி கூட்டணி அமைவதில் முக்கியப் பங்காற்றிவர். தமிழக தேர்தல் வரலாற்றில் 1996 ஆண்டு தேர்தல் முடிவு புதிய அரசியல் திசை வழியை உருவாக்கியது.

வகுப்புவாத சக்திகள் ஒன்றிய அதிகாரத்தை கைப்பற்றி, ஆட்சியில் அமர்ந்த ஆரம்ப நிலையில் இருந்து, அதற்கு எதிராக தமிழ்நாட்டில் அரசியல் அணிச் சேர்க்கையை உருவாக்கி எதிர்கொண்டவர்.

1982 ஆம் ஆண்டில் மீனாட்சிபுரத்தை மையமாகக் கொண்டு, மதவெறி சக்திகள் கலவரத்தை உருவாக்கிய போதும் 1993 -1998 காலகட்டங்களில் சாதி கலவரங்கள் வெடித்து மக்கள் பெருந்துயரத்துக்கு ஆளான போதும், தவத்திரு குன்றக்குடி அடிகளாருடன் இணைந்து செயல்பட்டு அமைதியை நிலைநாட்ட பெரும் பங்களித்தவர்.

சமூக அமைதிக்கும், நல்லிணக்கத்திற்கும் முனைப்புடன் பணியாற்றிய இரா. நல்லகண்ணுவின் மாமனார் அண்ணாசாமி மருதன் வாழ்வில் சாதி வெறியர்களால் வெட்டிக் கொலை செய்யப்பட்டார். இதற்காக அரசு தரப்பில் வழங்கிய வெகுமதிகளை சாதி கலவரத்தில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு பிரித்து வழங்கினார்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது.

தமிழ்மாநில விவசாயத் தொழிலாளர் சங்கத்தின் பொதுச் செயலாளராக பொறுப்பில் இருந்த காலத்தில், சாதிய ஒடுக்குமுறைகளுக்கு எதிராகவும், நிலவுரிமைக்காகவும் பல போராட்டங்களை முன்னெடுத்தவர்.

இந்திய விவசாயத் தொழிலாளர் சங்கத்தின் தேசிய செயலாளராகவும், இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மத்தியக் கட்டுப்பாட்டுக்குழுத் தலைவராகவும் பணியாற்றியவர். ஜெர்மன், சீனா உள்ளிட்ட வெளிநாட்டு பயணங்களை மேற்கொண்டவர்.

தமிழ்நாடு ஒடுக்கப்பட்டோர் வாழ்வுரிமை இயக்கத் தலைவர் பொறுப்பில் இருந்து சாதிய ஒடுக்கு முறைக்கு எதிராக போராட்டங்களை முன்னெடுத்தவர்.

தாமிரபரணி ஆற்றில் நடந்த மணல் கொள்ளைக்கு எதிராக சட்டப் போராட்டம் நடத்தி, ஐந்தாண்டுகள் தடை உத்தவு பெற்றவர் என்பது குறிப்பிடத்தக்கது.

தோழர் இரா.நல்லகண்ணுவின் பொதுச் சேவையைப் பாராட்டி, பல்வேறு அமைப்புகள் விருதுகள் வழங்கி சிறப்பு செய்துள்ளன. தமிழ்நாடு அரசு 2007ல் டாக்டர் அம்பேத்கர் விருதும், 2022ல் தகைசால் தமிழர் விருதும் வழங்கி சிறப்பித்துள்ளன. விருது தொகைகளை இயக்க வளர்ச்சிக்கும், முதலமைச்சர் பொது நிவாரண நிதிக்கும் வழங்கிய பெருமைக்குரியவர்.

தோழர் இரா.நல்லகண்ணு, இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் திருநெல்வேலி மாவட்டக்குழு உறுப்பினராக இருந்த மருதன் வாழ்வு கிராமத்தை சேர்ந்த அண்ணாசாமியின் மகள் இரஞ்சிதம் அம்மையாரை வாழ்விணையராக பெற்றவர். இவர் அரசுப் பள்ளி ஆசிரியராகப் பணியாற்றி ஓய்வுப் பெற்றவர். இவர் தோழர் இரா.நல்லகண்ணுவின் கட்சிப் பணிகளுக்கு அடித்தளமாக இருந்தவர். கடுமையான அடக்குமுறைகளையும், கொடுமைகளையும் எதிர்கொண்ட போது குடும்ப சுமைகளை முழுமையாக ஏற்று உறவுகளை பராமரித்து வந்தவர். குழந்தைகளை உயர்ந்த நிலைக்கு சிறப்பாக வளர்த்தெடுத்தவர். திருமதி இரஞ்சிதம் அம்மையார் 2016ஆம் ஆண்டில் காலமானார். இவர்களுக்கு ந.காசிபாரதி (ஓய்வு பெற்ற தலைமை ஆசிரியர்) டாக்டர் ந. ஆண்டாள் (ஓய்வு) ஆகிய இரண்டு மகள்கள் உள்ளனர். இதில் மூத்த மருமகன் வழக்கறிஞர் எஸ்.அழகுமுத்துபாண்டியன் கட்சி மற்றும் தொழிற்சங்க அரங்கில் முழுநேர ஊழியராக செயல்பட்டவர். தூத்துக்குடி மாவட்ட கட்சி செயலாளராகவும் பணியாற்றியவர். இரண்டாவது மருமகன் டாக்டர் என்.பழனி மருத்துவராக பணியாற்றியவர். இருவரும் சில வருடங்களுக்கு முன்பு காலமாகிவிட்டனர். இவர்களுக்கு சதிஷ் என்கிற பேரனும்,

ரஞ்சனி கண்ணம்மா, பிரியா ஆகிய இரண்டு பேத்திகளும் உள்ளனர்.

தோழர் இரா.நல்லகண்ணு தமிழ்நாடு அரசு வழங்கிய வீட்டில் வசித்து வந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.



தருமபுரி மேற்கு மாவட்டம் சிந்தல்பாடி,மற்றும் பாசாரப்பட்டியில் உள்ள முன்னாள் மாநில தொண்டரணி செயலாளர் முனைவர். ராஜேந்திரன் மற்றும் முன்னாள் மாவட்ட கழக செயலாளர் எம்.கோவிந்தராஜ் ஆகியோர் நினைவிடத்தில் தருமபுரி மேற்கு மாவட்டச் செயலாளர் முனைவர்.பி.பழனியப்பன் மற்றும் கழக கொள்கை பரப்பு செயலாளர் சி.வி.எம்.பி.எழிலரசன் எம்.எல்.ஏ. ஆகியோர் மலர் தூவி மரியாதை செலுத்தினர்.உடன் முனைவர் ராஜேந்திரன் மனைவி பாரதி,மகள் அமுதினி,சகோதரர் மு.கோவிந்தராஜ்,முன்னாள் மாவட்ட செயலாளர் வழக்கறிஞர் கோவிந்தராஜின் மனைவி கலைமணி,மகன் அரசு வழக்கறிஞர்.ஜி.ஜெயக்குமார்,மருமகள் சஞ்சுதா ஜெயக்குமார்,வழக்கறிஞர் பி.கே தாஸ்,ராதிகா தாஸ்,கே.மனோகரன்,இரா.சித்தார்த்தன்,சத்தியமூர்த்தி,பிரபு ராஜசேகரன்,பி.எஸ். சரவணன்,சிவப்பிரகாசம்,டி.சந்திரசேகர்,குபேந்திரன்,கஜேந்திரன்,ரவிச்சந்திரன் மற்றும் கழகத்தினர் பங்கேற்றனர்.



நீலகிரி மாவட்ட கூடுதல் ஆட்சியர் அலுவலகத்தில், பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறையின் சார்பில், கிறிஸ்தவ தேவாலயங்களில் பணிபுரியும் உபதேசியார்கள் மற்றும் பணியாளர்களின் நல வாரிய தலைவர் முனைவர் விஜிலா சத்யானந்த் தலைமையில், கிறிஸ்துவ சமுதாய மக்களுடன் கலந்தாலோசனை கூட்டம் நேற்று முன்தினம் (25.02.2026) நடைபெற்றது. உடன் மாவட்ட வருவாய் அலுவலர் நாராயணன், பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர் முத்துராஜா, நல வாரிய உறுப்பினர்கள் திருமதி ரோஸ்லின்ஜீவா, சத்தியபால்ராஜ், இமானுவேல் உட்பட பலர் உள்ளனர்.